**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.III, ERODE.**

| | | | |
|---|---|---|---|
| **Case No** | : CC No.**190/2023** | **Date** | : 11.02.2026 |
| **Deposition of Witness for** | : அ.சா. | **Taluk** | : |
| **Name** | : **T.**முருகன் | **Calling** | : |
| **Father Name** | : | **Religion** | : |
| **Village** | : | **Age** | : |

**Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of** 11.02.2026

(எதிரி ஆஜர். எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்)

**அரசு தரப்பு முதல் விசாரணை**:

1. நான் தற்போது திண்டுக்கல் மாநகராட்சியில் உணவு பாதுகாப்பு அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் ஏற்கனவே ஈரோடு மாநகராட்சியில் உண்வு ஆய்வாளராக பணிபுரிந்தபோது கடந்த 22.04.2009 மதியம் 01.00 மணிக்கு ஈரோடு மாநகராட்சி எ ல்லைக்குட்பட்ட கதவு எண்87, காந்திஜி ரோடு என்ற விலாசத்திலுள்ள திவ்யா டீஸ்டால் மற்றும் பேக்கரி என்ற டீ மற்றும் குளிர்பான விற்பனை கடைக்கு உணவு மாதிரி எடுத்து பகுப்பாய்வுக்கு அனுப்ப சென்றேன். அப்போது அங்கு இருந்தவரிடம் முதலில் என்னை ஈரோடு மாநகராட்சி உணவு ஆய்வாளர் என அறிமுகம் செய்து கொண்டு அவரை விசாரித்தேன். (**உணவு ஆய்வாளர் பயிற்சி சான்று நகல் அ.த.சா.ஆ,1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). அதற்கு அவர் தன்னுடைய பெயர் K.M. மூர்த்தி வயது 44, த/பெ. மாரிமுத்து எனவும், தான் மேற்படி கடையின் உரிமையாளர் மற்றும் லைசன்ஸ்தாரர் எனவும் தெரிவித்தார்.

2. பின்பு அவரிடம் நடப்பு வருடத்திற்கு மாநகராட்சியில் உணவு கலப்பட தடை சட்டத்தின்கீழ் உரிமம் செலுத்தப்பட்டுள்ளதா என கேட்டதற்கு உரிமம் செலுத்தபடவில்லை என தெரிவித்தார்.

அது சமயம் கடையை ஆய்வு செய்து அங்கு



பொது மக்களுக்கு விற்பனைக்காக மரரேக்கில் அடுக்கி வைக்கப்பட்டிருந்த Fanta Apple flavour sweetened Corbanated beverage பற்றி கேட்டதற்கு பொது மக்களுக்கு விற்பனைக்காக வைத்திருப்பதாக தெரிவித்தார். மேற்படி Fanta Apple flavour sweetened Corbanated beverage ல் கலப்படம் இருக்கலாம் என்ற சந்தேகத்தின்பேரில் உணவு மாதிரி எடுத்து பகுப்பாய்வுக்கு அனுப்ப வேண்டும் என்ற என் விருப்பத்தை எதிரி 1 னிடம் தெரிவித்தேன். அதற்கு அவரும் சம்மதம் தெரிவித்தார். அது சமயம் அருகிலிருந்து மேற்படி சம்பவங்களை பார்த்துக்கொண்டிருந்த K. வடிவேல் த/பெ. குழந்தைவேல், வேலு சலூன், வெங்கடேஷ்வரா லாட்ஜ் பில்டிங், தங்கபெருமாள் வீதி, ஈரோடு என்பவரிடம் உணவு மாதிரி எடுத்து முடிக்கும் வரையில் சாட்சியாக இருக்க கேட்டுக்கொண்டதற்கு அவரும் சம்மதம் தெரிவித்து ஆரம்பம் முதல் கடைசி வரை உடனிருந்தார். பின்னர் எதிரி 1 சம்மதத்தின் பேரில் சாட்சிகள் முன்னிலையில் படிவம் 6 ல் இரண்டு பிரதிகள் தயார் செய்து அதில் நான் கையொப்பம் இட்டு சாட்சியின் கையெழுத்து பெற்று 1 வது எதிரியிடம் படிவம் 6 ஒரு பிரதியை சார்பு செய்து அவரிடம் கையொப்பம் பெற்றுக்கொண்டேன். (**படிவம் 6 அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

3. பின்னர் மரரேக்கில் பொதுமக்களுக்கு விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த Fanta Apple flavour sweetened Corbanated beverage 600 மில்லி அளவு கொண்ட 5 பேக் செய்யப்பட்ட பெட் பாட்டில்களிலிருந்து மூன்று பெட் பாட்டில்களை ரூபாய் 69 கிரயம் செய்து ரொக்கமாக சாட்சி முன்னிலையில் விலை கொடுத்து வாங்கி அதற்குண்டான ரொக்க ரசீதில் எதிரியிடமும் சாட்சியிடமும் கையொப்பம் பெற்றேன். (**ரொக்கரசீது அ.த.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). Fanta Apple flavour sweetened Corbanated beverage கொள்முதல் செய்ததற்கான ரசீது கேட்டதற்கு Sanjay Enterprises 209 காந்திஜி வீதி, தமிழ்நகர், கொல்லம்பாளையம் என்ற விலாசத்தில் கொள்முதல் செய்ததற்கான ரசீது கொடுத்தார்கள். ரசீது

எண் 8, நாள் 20.04.2019 (**கொள்முதல் ரசீது அ.த.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). Fanta Apple flavour sweetened Corbanated beverage பாட்டில் மீதிருந்த விலாசம் Hindustan Cococola Beverages Pvt Limited, Plot No. 18, Bidadi Industrial Area , Bidadi Hobli., Ramnagar Dist, Bangalore 562109 என்பதனை உணவு



கலப்பட தடை சட்டத்தின்கீழ் 11(1)(எ) நோட்டிஸ் அனுப்புவதற்காக குறித்துக்கொண்டேன்.

4. பின்னர் விலைக்கு வாங்கிய 600 மி.லி அளவு கொண்ட 3 Fanta Apple flavour sweetened Corbanated beverage பேக் செய்யப்பட்ட பெட் பாட்டில்கள் ஒவ்வொன்றையும் தடித்த கெட்டியான பழுப்பு நிற தாளினால் நன்றாக சுற்றி முனைகளை உட்புறமாக மடித்து பசை தடவி ஒட்டினேன். பின்னர் உணவு மாதிரிக்கான LHA code No. 1/02 வரிசை எண் 8/2009-10 க்கான லேபிள்கள் மூன்றினை முறைப்படி பூர்த்தி செய்து அதனை ஒவ்வொரு உணவு மாதிரியின் உடல் பகுதியில் தனித்தனியாக பசை தடவி ஒட்டி லேபிளின் நான்கு முத்திரைகளிலும் அரக்கு முத்திரை வைத்தேன். பின்னர் ஒவ்வொரு உணவு மாதிரியையும் தடித்த கெட்டியான பழுப்பு நிற தாளினால் நன்கு சுற்றி முனைகளை உட்புறமாக மடித்து பசை தடவி ஒட்டினேன்.

5. மேற்படி உணவு மாதிரிக்கான ஸ்தலநல அலுவலர் கையொப்பம் இட்ட பேப்பர் ஸ்லிப்புகள் வரிசை எண் 8/2009-10 code எண் 1/02 என்ற மூன்றின் மீது பசை தடவி ஒவ்வொரு உணவு மாதிரி பாக்கெட்டின்மீதும் கீழிருந்து மேலாக வருமாறு நன்கு சுற்றி உடல் பகுதியில் ஒட்டினேன். பின்னர் ஒட்டப்பட்ட பேப்பர் ஸ்லிப் மற்றும் பழுப்பு நிற காகிதம் இரண்டிலும் படும்படியாக தேதியுடன் எதிரி 1டம் கையொப்பம் பெற்றேன். பின்பு நல்ல கெட்டியான நல்ல முறுக்கு நூலினால் உணவு மாதிரியின் மேலும் கீழும் குறுக்கும் நெடுக்குமாக நன்கு சுற்றி இருக கட்டி முடிச்சிட்டு நூல் முடிச்சின்மீது ஒரு அரக்கு முத்திரையும் உணவு மாதிரியின் தலைப்பாகம், அடிப்பாகம் தலா ஒரு அரக்கு முத்திரையும் உடல் பகுதியின் பக்கத்திற்கு ஒன்றாக இரண்டு அரக்கு

முத்திரையும் ஆக மொத்தம் 05 அரக்கு முத்திரைகளை பதித்தேன்.

6. மேற்படி சம்பவங்களை எதிரி 1ம் எழுதி ஒப்புதல் வாக்குமூலம் பெற்றேன். (**எதிரி 1ன் வாக்குமூலம் அ.த.சா.ஆ 5 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) . பின்னர் படிவம் 7 ல் மாதிரி முத்திரை பதித்து 5 பிரதிகள் தயார் செய்தேன். (**படிவம் 7 அ.த.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). மாதிரி சீல் பதிவு செய்த படிவம் 2 பிரதிகள் தயார் செய்தேன்.



(**மாதிரி சீல் பதிவு செய்த படிவம் அ.த.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**) . படிவம் 7 ன் பிரதி ஒன்றும், சீல் செய்யப்பட்ட உணவு மாதிரி பாக்கெட் ஒன்றும் ஒரு கவரில் போட்டு பசை தடவி ஒட்டி அதனை ஒரு மரப்பெட்டியில் வைக்கோல்களுடன் சுற்றி வைத்து சேதம் ஏற்படா வண்ணம் பேக்கிங் செய்து, சீலிட்டு, உணவு மாதிரி எடுத்த விவரத்தினை ஸ்தல நல அலுவலருக்கு அறிவிப்பு செய்தபின் சென்னை கிங் இன்ஸ்டிடியூட் பொது பகுப்பாய்வாளருக்கு Professional Courier Service மூலம் 22.04.2009 அன்று அனுப்பி வைத்தேன். **நல அலுவலர் அறிவிப்பு கடிதம் அ.த.சா.ஆ,8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. Professional Courier Receipt அ.த.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது** ).

**7.** பின்னர் Professional Courier ரசீது நகல் மற்றும் படிவம் 7 ன் பிரதி ஒன்றும், மாதிரி முத்திரை படிவம் ஒன்றும் சேர்த்து ஒரு கவரில் போட்டு பசை தடவிஒட்டிசீலிட்டு அதனை சென்னை கிங் இன்ஸ்டிடியூட் பொது பகுப்பாய்வாளருக்கு 22.04.2009 அன்று ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் அனுப்பி வைத்து அஞ்சலக ரசீது பெற்றேன். மேற்படி பதிவு தபால் சென்றடைந்ததற்கான ஒப்புதல் அட்டையும் கிடைக்கப்பெற்றது. (**அஞ்சலக ரசீது அ.த.சா.ஆ,10 ஆகவும், ஒப்புதல் அட்டை அ.த.சா.ஆ,11 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**). மீதமுள்ள 2 உணவு மாதிரிகளுடன் படிவம் 7 ன் இரண்டு பிரதிகள் சேர்த்து ஒரு கவரில் போட்டு பசை தடவி ஒட்டி அதன்மீது உணவு மாதிரி எடுத்த விவரம் குறித்த லேபிள் ஒட்டி அதனை ஸ்தல நல அலுவலரிடம் ஒப்படைத்து ஒப்புதல் பெற்றேன். (**ஒப்புதல் கடிதம் அ.த.சா.ஆ,12 ஆக குறியீடு**

**செய்யப்படுகிறது ).**

**8.** மேற்படி உணவு மாதிரியை பொது பகுப்பாய்வாளர் பகுப்பாய்வு செய்து உணவு மாதிரியான Fanta Apple flavour sweetened Corbanated beverage misbranded தப்பு குறியிடப்பட்டது என சான்று வழங்கி யுள்ளார். **(பகுப்பாய்வு அறிக்கை படிவம் 3 அ.த.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது ).** மேற்படி சான்று ஸ்தல நல அலுவலருக்கு வரப்பெற்று மேல்நடவடிக்கைக்காக எனக்கு கிடைக்கப்பெற்றது. மேற்படி Fanta Apple flavour sweetened Corbanated beverage தயாரிப்பாளர் மற்றும் ஈரோடு விநியோகஸ்தர் ஆகியோருக்கு 1954 ம் வருடத்திய உணவு கலப்பட தடைச்சட்டம் பிரிவு



11(1)(எ), 14(எ) மற்றும் 17(2) மற்றும் விதி 12 ன் கீழ் நோட்டீஸ் தயார் செய்து ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சலில் 04.06.2009 அன்று அனுப்பப்பட்டு அதை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டை எனக்கு கிடைக்கப்பெற்றது. (**தயாரிப்பாளருக்கு அனுப்பிய கடிதம் அ.த.சா.ஆ.14 ஆகவும், அஞ்சலக ரசீது அ.த.சா.ஆ.15 ஆகவும், ஒப்புதல் அட்டை அ.த.சா.ஆ.16 ஆகவும், விநியோகஸ்தருக்கு அனுப்பிய கடிதம் அ.த.சா.ஆ.17 ஆகவும், அஞ்சலக ரசீது அ.த.சா.ஆ.18 ஆகவும், ஒப்புதல் அட்டை அ.த.சா.ஆ.19 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**).

9. ஈரோடு விநியோகஸ்தர் சஞ்சய் எண்டர்பிரைஸ் 209, காந்திஜி வீதி, தமிழ் நகர், கொல்லம்பாளையம் அவர்கள் தன்னுடைய 09.06.2009 தேதிய கடித்தில் உரிமையாளர் சங்கீதா க/பெ.தமிழ்செல்வன் என்றும், உடன் உணவுகலப்பட தடைச்சட்டத்தின் உரிமம் செலுத்தியதற்கான ரசீது நகல் கொடுத்துள்ளார்கள். **(விநியோகஸ்தல் பதில் கடிதம் அ.த.சா.ஆ. 20 ஆகவும், உரிமம் ரசீது நகல் அ.த.சா.ஆ. 21 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது)**

10. தயாரிப்பாளர் தன்னுடைய 17.06.2009 ம் தேதிய கடிதத்தில் சுனில் குரியன் மேத்யூ த/பெ. பி.டிமாதை என்பவரை நாமினியாக நியமித்துள்ளதாக கடிதம் மற்றும் நாமினேஷன் நகல்

கொடுத்துள்ளார்கள். (**தயாரிப்பாளர் அவர்களின் கடிதம் அ.த.சா.ஆ. 22 ஆகவும், நாமினேஷன் நகல் அ.த.சா.ஆ. 23 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**) எனவே கதவு எண். 87, காந்திஜி ரோடு, ஈரோடு என்ற முகவரியில் உள்ள திவ்யா டீஸ்டால் மற்றும் பேக்கரி என்ற டீ மற்றும் குளிர்பான விற்பனை கடையின் விற்பனையாளர் மற்றும் உரிமையாளர் மூர்த்தி, த/பெ. மாரிமுத்து தப்புக்குறியிடப்பட்ட Fanta apple flavour sweetend conbonated Beverage Pack செய்யப்பட்ட பெட்பாட்டில்களை உணவு ஆய்வாளருக்கும், பொதுமக்களுக்கு விற்பனை செய்தார் என்ற குற்றத்திற்காகவும், உணவு கலப்பட தடைச்சட்டம் பிரிவுகளின் கீழ் உரிமம் பெறாமல் தொழில் நடத்திவந்த குற்றத்திற்காகவும், எதிரி 1 ஆகவும் மேற்படி தப்புக்குறியிடப்பட்ட Fanta apple flavour sweetend conbonated Beverage Pack செய்யப்பட்ட பெட்பாட்டில்களை விற்பனைக்கு விநியோகம் செய்த சஞ்சய் எண்டர்பிரைஸ் உரிமையாளர் சங்கீதா எதிரி



2 ஆகவும், நிர்ணயம் செய்து தயாரிப்பு கம்பெனி நாமினி சுனில் குரியன் மேத்யூ தயாரித்த குற்றத்திற்காக எதிரி 3 ஆகவும், ஒட்டுமொத்த தயாரிப்பு குற்றத்திற்காக Hindustan coco cola Beverages Private LTD Company எதிரி 4 ஆகவும் நிர்ணயம் செய்து , 1954 ம் வருடத்திய உணவு கலப்பட தடைச்சட்டம் பிரிவுகள் 7(ii) & 16(1)(a)(i) & 2(ix) (j) & (k) and rules 1955- Rule 42(zzz) 1(iii)ன் கீழ் குற்ற முறையீடு தயார் செய்து இணைஇயக்குநர், பொதுசுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருந்து துறை , உணவுகலப்பட தடைச்சட்டம் அவர்களுக்கு எதிரிகள் மீது வழக்கு தொடர எழுத்துபூர்வ அனுமதி பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்கிறேன். (**இணைஇயக்குநர் அனுமதி கோரிய கடிதம் அ.த.சா.ஆ 24 ஆகவும், இணைஇயக்குநர் அனுமதி வழங்கிய கடிதம் அ.த.சா.ஆ 25 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது**). எனவே எதிரி 1 முதல் 4 வரை உள்ளவர்களுக்கு தக்க தண்டனை வழங்குமாறு வேண்டுகிறேன்.

**குறுக்கு விசாரணை**

சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய எதிரி தரப்பிற்கு வாய்ப்பளித்தும் சாட்சியை குறுக்கு விசாரணை செய்யவில்லை, எனவே எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை என்று சாட்சியம் இத்துடன் முடிக்கப்பட்டது.

Taken Down by Before Me and Dictated By Me and Typed By the Typist in Open Court Read Over Interpreted on the witness in the presence of the accused/accused pleader and Admitted by the witness to be correct.

S R BABU

Digitally signed by S R BABU
Date: 2026.02.11 17:34:56 -0800

Judicial Magistrate No.III,
Erode.